**கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு -2012**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதிலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ள கண்டி மாவட்டத்தின் அரசாங்க அதிபரினால் நிதிக்கூற்றுக்கள் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் கங்கவட்ட கோரளைப் பிரதேச செயலாளரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பினால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படை மற்றும் முன்னெச்சரிக்கை என்பன கருத்திற் கொள்ளப்பட்டிருந்தன. 2010 சனவரி 19 ஆம் திகதிய பீஈடி 54 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் (SLPSA) தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானமான ரூபா 90,493 கிடைத்த வட்டி வருமானமாகவும் பெறவேண்டிய வைப்பு வட்டி வருமானமாகவும் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் குறைவாகவும் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்புக்குச் சொந்தமான தடாகத்தின் பெறுமதி ரூபா 73,350 ஆகவும், பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதன் பின்னர் பெறுமதி பூச்சியமாக இருந்த போதிலும், அது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு பிரமுக வங்கியில் வைப்புச் செய்திருந்த ரூபா 20,000,000 தொகை வங்கி மூடப்பட்டதுடன் 2002 ஆம் ஆண்டில் மத்திய வங்கிக்கு பொறுப்பேற்கப்பட்டு பொது நம்பிக்கையாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பொது நம்பிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக கருதி கணக்கீடு செய்யாமல் தொடர்ந்தும் அத்தொகை முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கீழே காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 98,600 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| பதவியணியினர் கொடுப்பனவுகளும் மாதாந்தப் | 232,000 | பெரஹர கடமைகளை ஒப்படைத்தல் தொடர்பான விபரங்கள் |

| | | |
|---|---|---|
| படிகளும் | | |
| சுற்றுப்புற தேவாலயங்களுக்கான உதவிகள் | 1,500,000 | உதவிகள் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் |
| சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான படிகள் | 50,000 | படிகள் கொடுப்பனவு மூலம் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் தொடர்பான விபரங்கள் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பனவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச் சட்டம் | |
| 19 ஆம் பிரிவு | ஆசனங்களை ஒதுக்குவதற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திர அதிகாரமொன்று இல்லாமல் அல்லாது தான் தோன்றித்தனமாக கட்டணங்களை அறவிட முடியாத போதும், 5181 ஆசனங்களை ஒதுக்குவதற்காக முறையான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

(ஆ) இலங்கை சனநாயக
சோஷலிசக் குடியரசின் நிதிப்
பிரமாணக் கோவை

| | |
|---|---|
| (i) நி.பி 267(i) | பதவியணியினருக்கான கொடுப்பனவுகள் மற்றும் விருதுகளைப் பெற்றுக்கொண்டோருக்கு கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 33,500 இற்குரிய பணம் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 756 | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 10,738 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,285,005 ஆகக் காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,295,743 தொகையான வீழ்ச்சியொன்றைக் காட்டியது. மீளாய்வாண்டில் எசல பெரஹரவை பார்வையிடுவதற்கான ஆசனங்களை ஒதுக்கியமைக்காக கிடைத்த வருமானம் ரூபா 1,122,850 ஆல் குறைவடைந்தமை அவ்வீழ்ச்சிக்கு விசேடமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) எசல பெரஹராவில் விருதுகளைப் பெறும் கலைஞர்களை தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நடுவர் சபையால் 3 சந்தர்ப்பங்களின் கீழ் 40 விருதுபெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், அக்கலைஞர்கள் விருதுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவர்கள் என நடுவர் சபையால் பரிந்துரைக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. இதனால் வழங்கப்பட்ட ரூபா 325,000 பரிசுத் தொகை உரிய பரிந்துரை செய்யப்படாத காரணத்தால் நடுவர் சபையின் கடமை முறைப்படி நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

(ஆ) எசல பெரஹர நடைபெறும் காலப்பகுதியில் நினைவிழக்கச் செய்யும் வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எந்தவொரு ஒப்பந்தமொன்றும் இல்லாமல் பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரின் பெயரில் ரூபா 50,000 இற்கு காசோலையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக அவருக்கும் அவரது பதவியணியினருக்கும் ரூபா 64,000 செலுத்தப்பட்டிருந்தது. பெரஹரவை நடாத்திச்செல்லும் போது அத்தியவசிய சேவையொன்றான நினைவிழக்கச் செய்யும் பதவியணியினரைப் பெற்றுக்கொள்ளும் போதே நினைவிழக்கச் செய்யும் மருந்துகளையும் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அவ்வாறு யானைகளை நினைவிழக்கச் செய்வதற்காக மருந்துகள் பெற்றுக்கொண்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 114,000 பயனற்ற செலவினமாக இருந்தது.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

நம்பிக்கைப் பொறுப்பின் கைவசமிருந்த ரூபா 20,000,000 தொகையை தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்த காரணத்தால் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக கணக்கீடு செய்யப்பட்ட சந்தை வட்டி மற்றும் பொது நம்பிக்கையாளரிடமிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் வழங்கப்படும் தொகையை செம்மையாக்கம் செய்ததன் பின்னர் ரூபா 932,000 வருமானத்தை பொறுப்பாண்மை இழந்திருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 442,850 இருந்த போதும், மீளாய்வாண்டில் அவ்வருமானம் ரூபா 250,000 ஆக அதாவது 44 சதவீதத்தால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னரே செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது நினைவிழக்கச் செய்யும் பதவியணியினருக்காக ரூபா 114,000 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த செலவினத்தை உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடும் போது 03 செலவின விடயங்களில் 17 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான நலிவுகள் அவ்வப்போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பொறுப்பாண்மைச் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) வருமான சேகரிப்பு
(இ) முதலீடு
(ஈ) கணக்கீடு